பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – பகுதி II திட்டம் 2010–2011 – திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடானா நீர்த்தேக்கத் திட்டத்தில் உள்ள பழைய அரசப்பட்டு மதகு எண் 1க்கு மேல்பகுதியில் வெளிப்போக்கி அமைக்கும் பணியை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் 2010–2011ம் ஆண்டிற்கு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>பொதுப்பணித்(ப்பி 2)துறை</u>

அரசாணை (நிலை) எண் 156 — நாள் 27 .05.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி 13

படிக்கப்பட்டது:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கடித எண் எப் / 7575 / பகுதி II / 2010 - 2011, நாள் 27.01.2010.

<u>ஆணை:</u>

தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறான கடானா ஆற்றின் குறுக்கே 1974 ஆம் ஆண்டு கடானா நீர்த்தேக்கம் கட்டப்பட்ட போது, அதன் கொள்ளளவு 352 மில்லியன் கனஅடி ஆகும். 2004 ஆம் ஆண்டு கூடுதலாக 76 மில்லியன் கனஅடி கொள்ளளவுக்கு இந்நீர்த்தேக்கம் விரிவுப்படுத்தப்பட்ட பின்னர், மொத்தம் 9152 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கடானா நீர்த்தேக்கக் கரைப் பகுதியில் பழைய அரசப்பட்டு கால்வாய் மதகு, வடகுறவைபட்டு மதகு, ஆற்று மதகு மற்றும் புதிய அரசப்பட்டு மதகு என்று நான்கு மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நீர்த்தேக்கத்தின் எல்.எஸ் 1150 மீட்டரில், கதவு அளவு 3'0'' x 3' மற்றும் அதன் தரைமட்ட அளவு + 392 அடியில் பழைய அரசப்பட்டு மதகு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசப்பட்டு கால்வாய் மூலம் 1197.97 ஏக்கர் நிலங்கள் நேரடிப் பாசனமும், 341.79 ஏக்கர் நிலங்கள் மறைமுகப் பாசனமும் பெறுகின்றன. 2000–2004ல் கடானா விரிவாக்கப் பணியின் கீழ் நீர்த்தேக்கத்தின் எல்.எஸ் 2201 மீட்டரில் கதவு அளவு 3' 0'' x 6'00" மற்றும் அதன் தரைமட்ட அளவில் +392 அடியில் புதிய அரசப்பட்டு மதகு அமைக்கப்பட்டு, அதன் மூலம் கூடுதலாக 546.79 ஏக்கர் நிலங்கள் மறைமுகப் பாசனமும், அரசப்பட்டு கால்வாயில் விட்டுப்போன சுமார் 85 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. இதன் வடிவமைப்பு கொள்ளளவு வினாடிக்கு 108 கனஅடி ஆகும். தற்பொழுது பழைய அரசப்பட்டு மடை மூலம் 85 ஏக்கர் நிலங்கள் மட்டுமே மடை எண்கள் 2 மற்றும் 3ன் மூலம் பயன்பெற்றுள்ளன. தற்போது மடை எண் 1ன் மூலம் வினாடிக்கு 2 அல்லது 3 கனஅடி நீர் வழங்குவதன் மூலம் மீன்வளத்துறையின் மீன்வளர்ப்புக்கான தண்ணீர் தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது.

2. 1992 நவம்பர் மாதம் பெய்த கனமழையினால் கடானா நீர்த்தேக்கத்திற்குள் மண்சேறு நிரம்பியதால், தற்சமயம் அதன் கொள்ளளவு 92 மில்லியன் கனஅடி குறைந்து விட்டது. இதனால் ஏற்கனவே பாசனம் பெற்ற நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, 2010–2011ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் பழைய அரசப்பட்டு கால்வாயின் மதகு எண் 1ன் மேற்புறத்தில் வினாடிக்கு 50 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றுத் திறனுடன் கூடிய வெளிப்போக்கி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நிலங்களை கையகப்படுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை, 2010–2011 ஆம் ஆண்டில், ரூ.5.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது.

3. மேற்கண்ட திட்டத்தினை 2010–2011ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடானா நீர்த்தேக்கத் திட்டத்தில் உள்ள பழைய அரசப்பட்டு மதகு எண் 1க்கு மேல்பகுதியில், ரூபாய் 5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) செலவில் வெளிப்போக்கி அமைக்கும் பணிக்கு 2010–2011ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லறைச் செலவினம், சிறு மேற்பார்வைச் செலவுகள் மற்றும் எதிர்பாராச் செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின்கீழ் ஏற்படும் மொத்தச் செலவுகள், மொத்தப் பணி (Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேலும், இத்திட்டப் பணிக்கான செலவினம், மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைவிட எக்காரணம் கொண்டும் அதிகரிக்க கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

5. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“4702 00 சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 101 மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JA சிறுபாசன சிறப்புத் திட்டம் – 16 பெரும்பணிகள் (த.தொ.கு 4702 00 101 JA 1607)”

6. மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் 17.05.2010 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண் 25483 / பொ.ப. II / 2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (ஏ&இ), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை 1), சென்னை–18.
நகல்
நிதித் (பொ.ப. II/வ.செ (பொது II) துறை, சென்னை–9.
பொதுப்பணித்(சி.பா.1)துறை, சென்னை–9 (5 நகல்கள்).

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்